மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் A 425, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

425--

விளவங்கோடு தொகுதி, கருங்கலுக்குப் பேருந்து வசதி ஏற்படுத்துதல்

*20440--**திரு. மா. சுந்தரதாஸ்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) விளவங்கோடு தொகுதி, விளாத்துறை பேரூராட்சியில் கறயான்குளம், ஐரேணிபுரம் வழியாக கருங்கலுக்குப் பேருந்து வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விடப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கறயான்குளம் அருகில் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளதுன. சாலை அமைக்கப்பட்ட பின்பு பேருந்துகள் இயக்கப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கு சாலைகள் நன்றாகத்தான் இருக்கின்றன. என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையிலேயும் நேஷனலைஸ்டு ரோட்ஸ். எல்லாமே அரசாங்க வண்டியாகத்தான் ஓட்டியாக வேண்டும். 11 ரோடுகளில் சுதந்திரம் கிடைத்தபிறகு அந்தப் பகுதியிலே பஸ்கள் போகவில்லை. ஏறக்குறைய 10 கிலோ மீட்டர் தூரம் உள்ள மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அந்தப் பகுதியிலே பஞ்சாயத்து ரோடுகள் இருக்கின்றன. மெட்டல் ரோடு இருக்கிறது. அந்தப் பகுதியிலே போகக்கூடிய நிறைய பஸ்கள் 84ஏ, ஜெ. ஜெ. பஸ்கள், அதைப்போல 82-எச் போன்ற பஸ்கள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. கேட்டால் அங்கே கலெக்ஷன் இல்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கு காரணம் அந்தப் பகுதியிலே ஆயிரத்திற்கும் மேலாக மினி பஸ்கள் ஓடுகின்றன. அது அரசுக்குத் தெரியும். அந்த மினி பஸ்களை நிறுத்தினால்தான், அரசாங்க பஸ்களை ஓட்டினால் லாபத்திற்கு ஓட்ட முடியும். ஆயிரம் மினி பஸ்கள் ஓடினால் எப்படி என்.டி.சி. லாபத்திலே ஓடும். இவையெல்லாம் ஆர்.டி.ஓ. ஆபிஸ் கையிலே இருக்கிறது.

1994 ஏப்ரல் 28]

ஆயிரம் மினி பஸ்களை நிறுத்தினால்தான் என்.டி.சி-யை லாபத்திலே ஓட்ட முடியும் என்பதை அரசு அறியுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: பேரவைத் தலைவர் அவர்களே, சில பேருந்துகள் டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக அன்றைக்கு நிறுத்தினார்கள். சில பேருந்துகளை நாங்கள் ஆய்வு செய்து சில பகுதிகளிலே இயக்கிக்கொண்டிருக்கிறோம். சில சாலைகள் சரியில்லாத காரணத்தினால், அந்தப் பகுதியிலே பேருந்துகளை இயக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார். அங்கே மாக்ஸிகேப் என்ற வேன்கள் இயக்கப்படுகின்றன. மினி பஸ் அல்ல. மாக்ஸிகேப் என்று நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இரண்டு ஆண்டு காலத்திலே யாருக்கும் புதிதாகப் பெரிமிட்டே தருவதில்லை. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இங்கிருந்து கடிதங்கள் அனுப்பப்பட்டு மாக்ஸிகேப் அதிகமாக விடுகின்ற காரணத்தினாலே அவர்கள் பாயிண்ட் டு பாயின்ட் என்று 1ரூ. 2ரூ. என்று கலெக்ஷன் செய்து அவர்கள் பேருந்துகள் இயக்குகின்ற காரணத்தினாலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற நேசமணி போக்குவரத்துக் கழகம் முழுவதுமாக தேசியமயமாக்கப்பட்டு அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு நஷ்டம் ஏற்படக் கூடாது என்பதற்காக நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். நான் மிக விரைவாக அந்த மாவட்டத்திற்கு வர இருக்கிறேன். வருகிற போது நீங்கள் எல்லாம் ஒத்துழைப்பு தர வேண்டும். கடுமையான நடவடிக்கை எடுக்கும்போது, நீங்கள் போராட்டம் நடத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் டீசல் தட்டுப்பாடு என்று சொல்லி நிறுத்தப்பட்டது என்று சொன்னீர்கள். திருவள்ளுவர் பஸ் போக்குவரத்து ஆனாலும் சரி, என்.டி.சி. ஆனாலும் சரி, இப்போது டீசல் தட்டுப்பாடு இல்லை. இப்போது கேட்டால் டீசல் தட்டுப்பாடு என்று சொல்வதில்லை. கலெக்ஷன் இல்லை என்று தான் சொல்கிறார்கள். ஆகையினால் குறிப்பாக–84ஏ, ஜெ.ஜெ. அதே போன்று 82 எச்–உடனடியாக திருப்பியும் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்னடயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1,026 பேருந்துகள் டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தப்பட்டன. நாங்கள் அத்தனை பேருந்துகளையும் இயக்கி–18 வழித்தடங்களிலே

இயக்க முடியாததற்கு காரணம் அந்த வழித்தடங்களிலே பாதைகள் சரியில்லாமல் இருக்கின்றன. மற்ற பேருந்துகள் இயக்கியாகிவிட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் டீசல் தட்டுப்பாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகத்திலே நிறுத்திய பேருந்துகள் அத்தனையையும் இயக்கியாக வேண்டும் என்று உத்தரவு வழங்கியதன் வாயிலாக இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல அந்தப் பாதைகள் சரியாக இருக்குமானால் மீண்டும் அரசு பரிசீலனை செய்து பேருந்துகள் இயக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். *426*, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

***426*--**

மேட்டுப்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்தில் குட்டை அமைத்தல்.

9321*–செல்வி எல். சுலோசனா:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

மேட்டுப்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திலுள்ள கோவனூர் அண்ணன் தம்பி பள்ளத்தில் குட்டை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (வடக்கு) வட்டம், நாயக்கன்பாளையம் கிராமம், எண் *389*-ல் கோவனூர் அருகே ஒரு புதிய கசிவுநீர்க் குட்டை அமைப்பதற்காக திட்ட மதிப்பீடு ரூ. *7.31* இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, சில குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தல அலுவலருக்கு அதாவது ஸ்பாட் ஆபீசர்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. இதற்கு மாவட்ட ஆட்சியருடைய ஒப்புதல் பெற்று எதிர்காலத்தில் இதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செல்வி எல். சுலோசனா: தலைவர் அவர்களே, கோவனூர் பகுதியைச் சுற்றியுள்ள பல கிராமங்களைச் சேர்ந்தவர்கள் விவசாயத்தை நம்பித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில் நிலத்தடி நீர் குறைந்து வறட்சி மாவட்டமாக மாறக்கூடிய சூழ்நிலை